සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I
Drama and Theatre (Tamil) I

58 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

சுட்டெண் : ..............................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** "கலை என்பது மனித உணர்வுகளின் வெளிப்பாடு" எனக் குறிப்பிட்டவர்
(1) ஆர். ஜீ. கொலிவுட் (2) குராசே (3) பிரட்லி
(4) தொம்சன் (5) அரவிந்தர் (........)

**2.** கலை பற்றிய இராமதாஸ் முகர்ஜி அவர்களின் கோட்பாடு யாது?
(1) அழகைக் கண்டுபிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதும் கலையாகும்.
(2) இந்தியக்கலை, இந்தியாவில் மட்டுமன்றி மக்களது மனிதப் பிரபஞ்சத்தை உள்ளடக்குகின்றது.
(3) மனிதனது உள்ளத்தை தன்வசமாக்கி நிரப்பி அவ்வளவோடு நின்றுவிடாது வெளிப்படுத்தும் ஆற்றலே கலையாகும்.
(4) பழிபாவமும் தன்னலமும் நிறைந்த உலகைவிட்டு தம்மை அப்பால் அழைத்துச் செல்வது இந்தியக்கலையாகும்.
(5) மனித உறவுகளையும் வாழ்க்கைக் குறிக்கோள்களையும் வகுத்து ஒழுங்குபடுத்துவதற்காக சமூகத்திடம் காணப்படும் நுட்பமான கவர்ச்சியுள்ள ஆற்றலுடைய கருவியே கலையாகும். (........)

**3.** சித்திரம், ஓவியம் என்பன
(1) குழைமக் கலைகளாகும். (2) வாய்ச்சொற் கலைகளாகும்.
(3) கேட்பியக் கலைகளாகும். (4) வரைகலைகளாகும்.
(5) ஆற்றுகைக் கலைகளாகும். (........)

**4.** "நாடகம் என்பது வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும்; பழக்கவழக்கங்களைக் காட்டும் கண்ணாடியாகும்" எனக் குறிப்பிட்டவர்
(1) சு. வித்தியானந்தன் (2) கா. சிவத்தம்பி (3) பேர்ணாட்ஷா
(4) அலடைஸ் நிக்கோல் (5) பரதமுனி (........)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



5. பின்வருவனவற்றுள் இந்தோனேசியாவில் தோன்றிய பொம்மலாட்ட அரங்க வடிவம் யாது?
(1) புண்றக்கு (2) லுத்துருக் (3) வயாங்குலிற்
(4) மயாங் (5) உடக்குப்பாஸ் (........)

6. அரிஸ்டோட்டல் தனது கவிதையியலில் அவலச்சுவையின் இலக்கணங்கள் பற்றி விளக்கும்போது நான்காவதாகக் குறிப்பிடும் உறுப்பு யாது?
(1) பாத்திரம் (2) இசை (3) கதைப்பின்னல்
(4) சிந்தனை (5) சொல்லாடல் (........)

7. பின்வருவனவற்றுள் கிரேக்க அவலச்சுவை நாடகக் கட்டமைப்பிற்குப் **பொருந்தாதது** யாது?
(1) ஸ்ரசிமா (Stasima)
(2) இசைப்பா முகாரி (Lyrical Lement)
(3) செய்தியாளர் (Masenger)
(4) முரண் (Agon)
(5) வெளியேறுகை (exodos) (........)

8. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
அ - அரங்கு மலையடிவாரமாக இருக்கும்.
ஆ - அரைவட்ட வடிவில் பார்ப்போர் அமர்ந்திருப்பர்.
இ - கொலோசிய அரங்கு எனவும் அழைக்கப்படும்.
ஈ - மையப் பகுதியில் பலிபீடம் இருக்கும்.
உ - செயற்கையாகக் கட்டப்பட்ட அரங்காகக் காணப்படும்.
மேலுள்ளவற்றுள் ரோம அரங்கு பற்றிய சரியான கூற்றுகள் யாவை?
(1) அ, ஆ, இ (2) அ, ஈ, உ (3) ஆ, இ, ஈ
(4) ஆ, இ, உ (5) இ, ஈ, உ (........)

9. பின்வருவோருள் ஸ்பெசல் நாடக மிகையுணர்ச்சி நடிப்பிற்குப் பெயர் போனவர் எனக் **கருதமுடியாதவர்** யார்?
(1) எஸ். ஜீ. கிட்டப்பா (2) கே. பீ. சுந்தராம்பாள் (3) பீ. வீ. சின்னப்பா
(4) எம். கே. தியாகராஜ பாகவதர் (5) கண்ணப்ப தம்பிரான் (........)

10. வடமொழி நாடகத்தின் கதைப்பின்னலில் 'தனக்குப் பயன் ஏதுமின்றித் தலைவனின் விருப்புக்காய் கற்பனை செய்யும் வரலாறு' எவ்வாறு அழைக்கப்படும்?
(1) பிஜ (2) பிந்து (3) பதகா
(4) பிரகரி (5) காரிய (........)

11. சிங்களப் பாரம்பரியச் சடங்கரங்கில் 'கோலம்' நிகழ்த்தப்படும் அரங்கவெளி
(1) களரி (2) கரலிய (3) சூடித்த களம்
(4) மலமடுவ (5) தானயம்பல (........)

12. சீன நாடக மரபில் நடிப்பின்போது கறுப்பு நிற ஆடையைப் பயன்படுத்துவோர் யாவர்?
(1) இளம் வயதினர் (2) சாதாரண மக்கள் (3) இராணுவ வீரர்கள்
(4) புலமையாளர்கள் (5) பகைவர்கள் (........)

13. உலகிற்கு சித்திரிப்பை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் எனக் கருதப்படுபவர்
(1) தெஸ்பிஸ் (2) அரிஸ்ரோபேன்ஸ் (3) யூறிப்பிடிஸ்
(4) சேக்ஸ்பியர் (5) இப்சன் (........)

14. பின்வரும் கூற்றுகளுள் சினிமா பற்றிய **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) களஞ்சியப்படுத்தத்தக்க கலை
(2) கமராவால் வரையப்படும் ஓவியம்
(3) கனவுத் தொழிற்சாலை
(4) செவிவழி நுழையும் ஒலி, இசை, உரை ஆகியன இணைந்த கலை
(5) கதைக்கேற்ற வகையில் காலங்களில் காட்சியைச் சித்திரிக்கவல்லது (........)

[பக். 3 ஐப் பார்க்க

**15.** அரிஸ்டோட்டல் தனது கவிதையியலில் திறஜெடிக் கொள்கைகள் தொடர்பான கருத்துக்களை எவ்வகை நாடகங்களிலிருந்து பெற்றுக்கொண்டார்?
(1) ஈஸ்கலஸ் (2) சோபோகிலிஸ் (3) யூறிப்பிடிஸ்
(4) மெனாண்டர் (5) செனேக்கா (........)

**16.** 'எதிர்ப்படும் துன்பங்களை நீக்குவதால் குறிக்கோள் நிறைவேறும் என்ற துணிவு பிறத்தல்' எனும் சமஸ்கிருத அவத்தைப் படிநிலை எதனைக் குறிக்கிறது?
(1) பிரத்தியாச (2) பிரயத்தன (3) நியதாப்த
(4) ஆரம்ப (5) பலாகம (........)

**17.** பின்வருவனவற்றுள் யதார்த்தவாதத்துடன் தொடர்புடைய கூற்று யாது?
(1) படச்சட்ட அரங்கின் எல்லைகளை உடைத்து வெளியே வருதல்
(2) எடுத்துரைப்பு முறைமையை அறிமுகம் செய்தல்
(3) பார்ப்போரை நான்காவது சுவராகக் கருதுதல்
(4) தனிமனிதப் பிரச்சினைகளுக்குப் பதிலாக சமூகப் பிரச்சினையை முதன்மைப்படுத்தல்
(5) மனித இருப்பினைக் குறியீடாகக் கருதுதல் (........)

**18.** கிரேக்க சற்றயர் நாடகங்களின் இயல்பு **அல்லாதது**
(1) 'வனதேவதை நாடகங்கள்' என அழைக்கப்படும்.
(2) அங்கதச் சுவையுடைய நாடகமாகக் காணப்படும்.
(3) பாதி மனித, பாதி மிருகப் பண்புடைய நாடகமாகக் காணப்படும்.
(4) டித்திறாம் பாடலிலிருந்து தோற்றம் பெற்றது.
(5) திறஜெடி நாடகத்தின் பின் நிகழ்த்தப்படுவது. (........)

**19.** இசை நாடகங்களில் மோகனம், நீலாம்பரி ஆகிய இராகங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் யாவை?
(1) சோகம், கோபம் (2) அதிகாலை, அந்திமாலை (3) கோபம், தாலாட்டு
(4) சந்தோசம், துக்கம் (5) அதிகாலை, தாலாட்டு (........)

**20.** பின்வருவனவற்றுள் தமிழக அரங்க வரலாற்றில் ஆய்ச்சியர் குரவையுடன் தொடர்புடைய பாத்திரம் எது?
(1) மாதவி (2) மாதரி (3) விறலி
(4) பாடினி (5) பதியிலார் (........)

**21.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
அ - நடைமுறை வாழ்வியலை ஒத்திருக்கும்.
ஆ - லலிதம் கலந்த அங்க அசைவுகளைக் கொண்டிருக்கும்.
இ - இயல்பற்ற நடிப்புப் பாவங்களைக் கொண்டிருக்கும்.
ஈ - உலக இயல்பைப் பின்பற்றி வருவனவாகக் காணப்படும்.
உ - பாத்திரங்களின் இயல்பான நடத்தையை எடுத்துக்காட்டும்.
மேலுள்ளவற்றுள் 'லோக தர்மி' தொடர்பான கூற்றுகள் யாவை?
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, ஈ (3) அ, இ, உ
(4) ஆ, ஈ, உ (5) இ, ஈ, உ (........)

**22.** 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் வாழ்க்கை பற்றிய சிந்தனை மாற்றமடைந்தமைக்கான பின்புலக் காரணி **அல்லாதது** யாது?
(1) வேலையின்மை
(2) கற்பனை உலகில் சஞ்சரித்தமை
(3) குழந்தைத் தொழிலாளிகள் உருவாக்கம்
(4) நகரமயமாக்கம்
(5) சுதேச வளங்களின் அழிவு (........)

**23.** சமஸ்கிருத நாடக மரபில் கட்டமைப்பு என்பது
(1) ஆற்றுகையின்போது கதை நகர்ந்து செல்லும் ஒழுங்கு ஆகும்.
(2) தேர்ந்தெடுத்த கதையின் நிகழ்வு ஒழுங்கமைப்பட்ட விதம் ஆகும்.
(3) பெரும்பாலும் துணைப் பாத்திரங்களுடன் தொடர்புபட்டிருக்கும்.
(4) 'அர்த்தப் பிரகிருதிகள்' என அழைக்கப்படும்.
(5) வினை நிகழ்வுகளின் ஒழுங்குமுறையாகும். (........)

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



- பின்வரும் கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு **24, 25** ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

அ - வாழ்வை இலட்சிய நோக்கில் பார்க்கும் தன்மை
ஆ - உணர்ச்சி முனைப்புடைய இனிய முடிவுகளைக் கொண்ட நாடகங்கள்
இ - மிகைப்படுத்தப்பட்ட அசைவுகள், செயல்கள்
ஈ - காதல், வீரம் என்பன முதன்மைப்படுத்தப்படல்
உ - கற்பனை, மனவெழுச்சி ஆகியவற்றைக் கொண்டிருத்தல்
ஊ - ஒரு வகையான வீர நடிப்பு முறை

**24.** மேல்வருவனவற்றுள் மனோரதிய நாடகங்கள் பற்றிய கூற்றுகள் யாவை?
(1) அ, ஆ, இ (2) அ, ஈ, உ (3) ஆ, ஈ, உ
(4) ஆ, ஈ, ஊ (5) இ, ஈ, உ (........)

**25.** மேல்வருவனவற்றுள் மிகைப்பாட்டு நாடகம் தொடர்பான கூற்றுகள் யாவை?
(1) அ, ஆ, இ (2) அ, இ, ஈ (3) ஆ, இ, ஈ
(4) ஆ, ஈ, உ (5) ஆ, ஈ, ஊ (........)

**26.** சமஸ்கிருத அரங்கில் சத்திரிய வர்க்கத்தார் அமர்ந்திருந்து பார்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தூணின் நிறம்
(1) வெள்ளை (2) கறுப்பு (3) மஞ்சள்
(4) பச்சை (5) சிவப்பு (........)

**27.** இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஊம நாடக முறைமைக்கு அத்திவாரமிட்டவர்
(1) யக்குஸ் கோப்பா (Jacques Copae)
(2) மார்சல் மஸ்யூ (Marcel Masceuu)
(3) ஒகஸ்டஸ் (Augustas)
(4) டொன் பஸ்ரியன் (Don Bastion)
(5) லெங்கின் ஷிலார்ட்ஸ் (Lengin Shi Lards) (........)

**28.** எந்தையும் தாயும் நாடகத்தில் தமது பிள்ளைகளை நினைத்து ஏங்கும் பாத்திரங்களாக ஆசிரியரால் படைக்கப்பட்ட பாத்திரங்கள் யாவை?
(1) வசந்தி, கண்ணன் (2) மகேஸ்வரி, வசந்தி
(3) செல்வரட்ணம், ஐயாத்துரை (4) சங்கரப்பிள்ளை, செல்வரட்ணம்
(5) கண்ணன், ஐயாத்துரை (........)

**29.** பின்வருவனவற்றுள் குரலை முதன்மைப்படுத்தும் ஆற்றுகைக் கலைவடிவம் யாது?
(1) பலே (2) கதகளி (3) ஊமம்
(4) இசை நாடகம் (5) பரத நாட்டியம் (........)

**30.** சோதிப்பிழம்பாகத் தோன்றிய சாருமதி சகுந்தலையைத் தூக்கிச் செல்லும் சந்தர்ப்பத்தில் பார்ப்போரிடையே ஏற்படும் ரச உணர்வு யாது?
(1) வீரம் (2) பயானக (3) ரௌத்திரம்
(4) அற்புதம் (5) பீபத்ச (........)

**31.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

அ - உருவமற்ற கல் வழிபாடு
ஆ - எரித்த தேயிலைச் செடி இலையை ஒப்பனைக்காகப் பயன்படுத்தல்
இ - கதவடைத்துப் பாடுதல்
ஈ - மரக்கறி சேமிப்புக்காக வண்டி கட்டிப் புறப்படுதல்
உ - சுடலையிலிருந்து எடுத்துவந்த மண்ணைச் சாப்பிடுதல்

மேல்வருவனவற்றுள் காடேறித் திருவிழாவுடன் தொடர்புடைய கூற்றுகள் யாவை?
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, ஈ (3) அ, இ, உ
(4) ஆ, இ, உ (5) இ, ஈ, உ (........)

**32.** "ஒரு காலத்தில் சடங்காக இருந்த ஒன்று சமய சார்பற்ற நிலையை எய்துகின்றபோது நாடகமாகும்" எனக் குறிப்பிட்டவர் யார்?
(1) கா. சிவத்தம்பி (2) கே. ஜே. குணவர்த்தன (3) காளிதாசர்
(4) சரத்சந்திரா (5) கீத் (........)

[பக். 5 ஐப் பார்க்க

**33.** உடல் அங்கங்கள், செய்கைகள், அசைவுகளுடன் ஒளி, உடை, இசை, ஒப்பனை போன்ற துணைக்கலைகள் இணைந்த நடிப்பு நுட்பம்

(1) வகிபாகம் ஆடுதல் ஆகும். (2) போலச் செய்தல் ஆகும். (3) ஊமம் ஆகும்.
(4) புதிதளித்தல் ஆகும். (5) மறுதலைப் பாகம் ஆடுதல் ஆகும். (........)

**34.** பதியிலார், சதுரிமாணிக்கம் போன்ற ஆடல் மகளிர் எக்காலத்திற்கு உரியோராவர்?

(1) சங்க காலம் (2) வீரயுகம் (3) சிலப்பதிகார காலம்
(4) பல்லவர் காலம் (5) நாயக்கர் காலம் (........)

**35.** மன்னார் மாதோட்டத்திற்குரியதான தனித்துவமான நாடக வடிவம்

(1) வடபாங்கு (2) தென்பாங்கு (3) பாஸ்கா
(4) நாட்டைக் கூத்து (5) வடமோடி (........)

**36.** பின்வருவனவற்றுள் கோவலன் கூத்துடன் **தொடர்பற்ற** கூற்று யாது?

(1) வஞ்சிப்பத்தன் ஆட்டம் பிரத்தியேகமானது.
(2) பார்ப்போர் சுற்றிவர இருந்து பார்க்கக்கூடியது.
(3) நடிகர் விரதமிருந்து கூத்துக்களில் பங்கேற்பர்.
(4) தாளக் கட்டுக்கள் காணப்படாது.
(5) கோவலன் - கண்ணகி கதையை அடிப்படையாகக் கொண்டது. (........)

**37.** மேல்வருவனவற்றுள் சங்க காலத்தில் அரசனின் புகழ், வீரம் என்பவற்றைப் புகழ்ந்து பாடிய பாணர் பயன்படுத்திய வாத்தியம்

(1) கோடு (2) முழவு (3) யாழ்
(4) முரசம் (5) கிணை (........)

**38.** கலித்தொகையின் அமைப்பு நாடக ஆற்றுகைக் கட்டமைப்பிற்குரியது என்பர். அதில் 'தரவு' எனும் பகுதி எதனைக் குறிக்கும்?

(1) நாடக ஆரம்பத்தை ஆகும்.
(2) இசை தாழ்ந்து வருவதை ஆகும்
(3) உரையாடற் பகுதியை ஆகும்.
(4) சுழன்று ஆடும் பகுதியை ஆகும்.
(5) பாடல் மேலோங்கும் பகுதியை ஆகும். (........)

**39.** றிச்சேர்ட் செக்னர் பின்வருவனவற்றுள் எதிலிருந்து தனது சூழல் அரங்கின் மூலங்களைப் பெற்றுக்கொண்டார்?

(1) விவிலியப் பாடல்கள்
(2) ராம்லீலா எனும் சடங்கு
(3) சடங்கியல் மூலங்களின் அடிப்படை
(4) பொதுவணக்கப் பாடல்கள்
(5) இந்திய இதிகாசங்கள் (........)

**40.** இப் படத்திலுள்ளவர் உருவாக்கிய நாடக நடிப்புக் கோட்பாடு யாது?



(1) முறைமைக் கோட்பாடு
(2) அந்நியமாதல் கோட்பாடு
(3) வறுமை அரங்கக் கோட்பாடு
(4) அபத்தக் கோட்பாடு
(5) உடற்பொறிமுறைக் கோட்பாடு

(........)

PAST PAPERS WIKI

* *

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I
Drama and Theatre (Tamil) I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** (i) சடங்காற்றுகை, நாடக ஆற்றுகை ஆகியவற்றின் ஆற்றுகை முறைமைகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) சமகால ஆற்றுகை ஒன்றை உருவாக்குவது தொடர்பாக உமது ஆலோசனைகளை முன்வைக்குக. (05 புள்ளிகள்)

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆற்றுகைகள் ஒவ்வொன்றிலும் பார்வையாளர் - ஆற்றுவோர் தொடர்புபடும் விதத்தை ஒப்பிடுக. (05 புள்ளிகள்)

**2.** (i) பின்வரும் நடிப்பு முறைகள் பற்றி விளக்குக.

(அ) முறைமைக் கோட்பாட்டில் நடிப்பு முறை (05 புள்ளிகள்)

(ஆ) சூழல் அரங்கில் நடிப்பு முறை (05 புள்ளிகள்)

(ii) உமது வயதை ஒத்த குழுவினருக்கு அரங்கை உருவாக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய பொருத்தமான நடிப்புமுறை பற்றி உமது நடைமுறை அனுபவங்களினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** ஆலய வெளியில் நிகழும் கலை, நவீன அரங்கக் கலை என்பவற்றில் பின்வருவன எவ்வாறு இடம்பெறும் என்பதனை விளக்குக.

(i) ஆற்றுகை வெளியின் அமைப்பு (05 புள்ளிகள்)

(ii) ஆற்றுகை முறைமை (05 புள்ளிகள்)

(iii) பார்வையாளர் - ஆற்றுவோர் ஊடாட்டம் (05 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** ஈழத்தின் பாடசாலை நாடகங்கள் பற்றிய சமகால நிலைமையை விளக்கி, அதனை மேம்படுத்துவதற்கான உமது தர்க்கரீதியான ஆலோசனைகளை முன்வைக்குக. (15 புள்ளிகள்)

**5.** உமது நண்பர்களுடன் இணைந்து கலந்துரையாடல் முறையிலான அரங்கொன்றை நிகழ்த்த வேண்டியுள்ளதெனக் கருதுக. அவ்வகை அரங்கொன்றின் சாதக, பாதக அம்சங்களை விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) வாசிப்பு ஒத்திகை

(ii) பட்டறை அரங்கு

(iii) இயல்புநிலைச் சித்திரிப்பு

(iv) தளைநீக்க அரங்கு

(v) நாடகத்தில் ஒளியின் பயன்பாடு

(05 × 3 = 15 புள்ளிகள்)

* * *

இங்கே வேறாக்கவும்

PAST PAPERS WIKI

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II
Drama and Theatre (Tamil) II

**58 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

சுட்டெண் : ..........................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** "நாடக ஆசிரியர் ஒருவர் உண்மையான வாழ்வின் ஒரு பகுதியை நேர்மையோடு மேடையில் அமைத்துக் காட்டவேண்டும்" எனக் குறிப்பிட்டவர் யார்?
(1) இப்சன் (2) செக்கோவ் (3) எமிலிசோலா
(4) பேர்னாட்சா (5) ஸ்ரின் பேர்க் (........)

**2.** பின்வருவனவற்றுள் ரசனையின் போது படைப்பாளியின் பிரசன்னமின்றிய படைப்பு எது?
(1) இலக்கியம் (2) இசை (3) நடனம்
(4) நாடகம் (5) வில்லுப்பாட்டு (........)

**3.** பின்வருவனவற்றுள் சிங்கள தொவில் அரங்கில் காணப்படும் பாத்திரம்
(1) கோணங்கி (2) கோடங்கி (3) வெசமுனி
(4) கட்டியக்காரன் (5) பகுபூதைய்யா (........)

**4.** ஈடிபஸ் நாடகத்தில் வரும் தீர்க்கதரிசி பாத்திரம் யாது?
(1) தெஸ்பிஸ் (2) தைரிசியஸ் (3) கொறிகஸ்
(4) பொகிபஸ் (5) புறூட்டஸ் (........)

**5.** பின்வருவனவற்றுள் எலிசபெத் கால அரங்கின் கட்டமைப்பில் உள்ள பண்பு **அல்லாதது**
(1) முன்துருத்திய மேடை
(2) மூன்று மாடிகள் கொண்டவை
(3) கண்டுபிடித்தல் வெளி காணப்படுதல்
(4) பட்டணச் சதுக்க அரங்குகள்
(5) பொறிகள் பயன்படுத்தப்படுதல் (........)

[பக். 2 ஐப் பார்க்க

6. ஓர் இளைஞன் பாவத்தாலும் காமத்தாலும் தூண்டப்பட்டு இறுதியில் நற்பண்புவழி சேர்வதாகக் காட்டப்படும் மத்திய கால நாடகம்
(1) பாணர் இசை நிகழ்ச்சி (2) வீர நாடகம்
(3) ஒழுக்கப்பண்பு இடை நிகழ்வு (4) விகட நாடகம்
(5) பரிகசிப்பு நாடகம் (........)

7. எலிசபெத் காலத்தில் பிளாங்வேர்ஸ் (Blank verse) முறையில் நாடகங்களை எழுதியவர்
(1) தோமஸ் கீற் (2) கிறிஸ்தோபர் மாலோ
(3) பென் ஜோன்சன் (4) ஜோன் லிலி
(5) றொபேட் ஹரீசன் (........)

8. அபிக்ஞான சகுந்தலம் நாடகத்தில் வரும் காவலர், கஞ்சுகி என்போர்
(1) தோழிகள் ஆவர். (2) மாணாக்கர் ஆவர்.
(3) அஸ்தினாபுரப் பெண்கள் ஆவர். (4) ஏவலாளர்கள் ஆவர்.
(5) தூதர்கள் ஆவர். (........)

9. 'ஆகாயக் கிளர்த்தல்' என்னும் நாடகச் சொல்லாடல் முறை எதனைக் குறிக்கும்?
(1) நடிகர் தனக்குத்தானே பேசுதல்
(2) ஏனைய பாத்திரங்கள் பற்றிப் புறங்கூறுதல்
(3) மேடைக்கு வராத பாத்திரங்கள் பேசுதல்
(4) இருவருக்கு இடையிலான உரையாடல்
(5) நடிகர் பார்ப்போரை விழித்து நேரெதிரே பார்த்துப் பேசுதல் (........)

10. 'வெனிஸ் நகர வர்த்தகன்' என்பது சேக்ஸ்பியரால் எழுதப்பட்ட ஒரு
(1) அவலச் சுவை நாடகம் ஆகும்.
(2) கற்பித நாடகம் ஆகும்.
(3) சற்றயர் நாடகம் ஆகும்.
(4) வரலாற்று நாடகம் ஆகும்.
(5) மகிழ்நெறி நாடகம் ஆகும். (........)

11. பின்வருவனவற்றுள் இராவணேசனின் தன்மானம் அழுத்தம் பெறும் பாடல் எது?
(1) "துன்றிடும் பெண்ணைவிட்டு தொழுது வாழ் சுற்றத்தோடும்..."
(2) "வெற்றி வீரனாக வந்து உன்னைச் சந்திக்கிறேன். அதன்பின் வேண்டுமானால் சீதையை விடுகிறேன்..."
(3) "அனுப்பினேன் வீரரெல்லாம் அனைவரும் இறந்தனரையோ..."
(4) "மும்மூர்த்திகளையோட்டி இம்மாநிலத்திலே முறைசறைந்தேயிருந்தோன்..."
(5) "இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கு மிறுதி உண்டோ..." (........)

12. சோபோகிலிசின் ஈடிப்பஸ் நாடகம் பின்வருவனவற்றுள் எதனை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது?
(1) அதீனிய புராணத்தை ஆகும். (2) தீபிய புராணத்தை ஆகும்.
(3) கொறிந்திய புராணத்தை ஆகும். (4) கொறிகஸ் புராணத்தை ஆகும்.
(5) புறுட்டஸ் புராணத்தை ஆகும் (........)

13. 'கிங்லியர்' நாடகத்தில் வரும் 'எட்கார்' பாத்திரம் பற்றிய **பிழையான** கூற்று யாது?
(1) லியரின் பிள்ளைகளில் ஒருவர். (2) நேர்மையான குணம் கொண்டவர்.
(3) எட்மண்டின் சகோதரர். (4) சகோதரனால் விரோதிக்கப்பட்டவர்.
(5) தந்தையின்பால் விருப்புக்கொண்டவர். (........)

14. இராவணேசன் நாடகத்தில் வரும் "வாரணம் பொருத மார்பும்..." மற்றும் "வென்றிலன் என்ற போதும்..." போன்ற பாடல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட இலக்கியம்/கூத்து
(1) இராம நாடகம் (2) இலங்கை வேந்தன் (3) கம்பராமாயணம்
(4) வீணை வேந்தன் கூத்து (5) சிவபுராணம் (........)

15. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட, அரசியல் கருத்துக்களை உள்ளடக்கிய நாடகம்
(1) பொருளோ பொருள் (2) சுந்தரம் எங்கே? (3) தவறான எண்ணம்
(4) இரட்டை வேசம் (5) குரங்குகள் (........)

[பக். 3 ஐப் பார்க்க

16. "ஹிட்லரின் காலத்தில் வாழ்ந்த இவர், அவரது நாசி இயக்கத்திற்கு எதிராகக் கட்டுரை, கவிதை எழுதியதால் ஹிட்லரின் கோபத்திற்கு உள்ளாகி ஒழிந்து வாழ்ந்தார்." இக்கூற்றிற்குப் பொருத்தமானவர் யார்?
(1) மேய கோல்ட் (2) பிறெக்ட் (3) பிஸ்காட்டர்
(4) கோணேல் (5) ரசீன் (........)

17. பின்வருவனவற்றுள் கலையரசு சொர்ணலிங்கம் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) உள்ளதை உள்ளவாறு காட்டும் இயற்பண்புப் போக்கில் காட்சிகளை அமைத்தார்.
(2) சொல்லாடல்களைப் பயன்படுத்தி மேற்கத்தேய நாடகப்பாணியைப் பின்பற்றி நாடகங்களை அளிக்கை செய்தார்.
(3) கற்பனை சார்ந்த கதைகளை நாடக உள்ளடக்கமாகக் கொண்ட படைப்புகளை உருவாக்கினார்.
(4) பாத்திரமாகவே மாறி மேடையில் நிற்கும்வரை நடித்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.
(5) தனது நாடகங்களில் கிராமத்தவர்களையே நடிக்கச் செய்தார். (........)

18. பின்வருவனவற்றுள் கிங்லியர் நாடகத்தினூடாக நாடகாசிரியர் கூறவந்த கருத்து **அல்லாதது**
(1) வெளித்தோற்றத்தைக் கண்டு ஏமாறக்கூடாது.
(2) உண்மை நிலையை அறியவேண்டும்.
(3) இறைவன் வகுத்த செயலை மனிதன் மீறமுடியாது.
(4) நல்லவற்றைச் செய்தவனும் அழிந்து போகிறான்.
(5) விதியை மனிதனால் வெல்ல முடியும். (........)

19. ஒரு பாவையின் வீடு நாடகத்தின் பிரதான கரு யாது?
(1) ஆண்களுக்கெதிரான போராட்டம்
(2) இல்லற வாழ்வின் புரிந்துணர்வின்மை
(3) குடும்பம் எனும் நிறுவனத்தின் குறைபாடுகள்
(4) பிரிந்தவர்கள் இணைந்து கொள்வார்கள்
(5) நோராவின் ஊதாரித்தனம் (........)

20. மத்தியகால அரங்கில் அருட்சகோதரி 'ரொஸவித' என்பவர் தொல்சீர் நாடக ஆசிரியர் ஒருவரின் நாடகங்களைத் தழுவி ஆறு மகிழ்நெறி நாடகங்களை எழுதினார் எனக் கூறப்படுகிறது. அந்நாடகாசிரியர் யார்?
(1) அரிஸ்ரோபேன்ஸ் (2) மெனாண்டர் (3) புளோட்டஸ்
(4) ரெரன்ஸ் (5) செனேக்கா (........)

21. பின்வருவனவற்றுள் திரவியம் இராமச்சந்திரன் அவர்களால் எழுதப்பட்ட நாடகம் யாது?
(1) உத்தமன் பரதன் (2) அற்றைத் திங்கள்
(3) கானகம் ஏகிய இராமன் (4) பத்மாசுரன்
(5) பாஞ்சாலி சபதம் (........)

22. 1980 ஆம் ஆண்டுகளில் பெண்ணியக் கருத்துக்களைப் பேசிய நாடகங்கள் எனக் கொள்ளத்தக்கவை
(1) கோபுர வாசல், கந்தன் கருணை
(2) விழிப்பு, கடூழியம்
(3) மாதொரு பாகம், சக்தி பிறக்குது
(4) சங்காரம், பொறுத்தது போதும்
(5) தாயுமாய் நாயுமானார், மண்சுமந்த மேனியர் (........)

23. பின்வருவனவற்றுள் கோடை நாடகம் எழுந்த காலம் தொடர்பான **பிழையான** கூற்று யாது?
(1) தேசியப் பாரம்பரியம் அழித்தொழிக்கப்பட்டமை.
(2) வெளிநாட்டு மோகம் கொண்ட அடிமை மனப்பாங்கு ஏற்பட்டமை.
(3) பணப்பரிமாற்ற அறிமுகம் காரணமாக இலஞ்சம், ஊழலுக்கான வாய்ப்பேற்பட்டமை.
(4) கல்வி கட்டாயமாக்கப்பட்டு ஆங்கிலக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமை.
(5) சுதேசியக் கலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை. (........)

24. பின்வருவோருள் 'ஐயா எலெக்சன் கேட்கிறார்' என்ற நாடகத்தை எழுதியவர் யார்?
(1) நந்தி (2) மாவை நித்தியானந்தன்
(3) எஸ். ரி. உமைபாலன் (4) சொக்கன்
(5) அ. ந. கந்தசாமி (........)

Past Papers Wiki



**25.** ஒரு பாவையின் வீடு நாடகத்தில் வரும் 'நீல்ஸ் குறோக்ஸ்ரட்' எனும் பாத்திரம் ஒரு
(1) வைத்தியர் (2) சட்டத்தரணி
(3) வங்கி முகாமையாளர் (4) பொதி தூக்கி
(5) வங்கி சிற்றூழியர் (........)

**26.** 2000 ஆம் ஆண்டின் பின்னர் மக்களின் அரசியல் உத்வேகத்தைத் தூண்டிய சீன மொழிபெயர்ப்பு நாடகம்
(1) செம்பவளக்காளி (2) செவ்விளக்கு
(3) அண்டவெளி (4) ஆர்கொலோ சதுரர்
(5) காண்டவ தகனம் (........)

**27.** சிங்கள சடங்கரங்கில் பதினெட்டுப் பேய்கள் தொடர்பான கதை கூறும் அரங்க வடிவம்
(1) தொவில் (2) ரட்டயக்கும
(3) சன்னியக்கும (4) கொஹோம்ப கங்காரிய
(5) ஊறுயக்கும (........)

**28.** பின்வருவனவற்றுள் ஈழத்தில் வெளிவந்த நாடக அரங்கியல் சஞ்சிகைகள் யாவை?
(1) ஜீவநதி, காலச்சுவடு (2) வெளி, களரி
(3) ஓலை, கலைமுகம் (4) ஆற்றுகை, கூத்தரங்கம்
(5) கூத்தம்பலம், வெளிச்சம் (........)

**29.** 'சிங்கள நாடகக் கலை ஆளுமைகள்' எனும் நூலின் ஆசிரியர் யார்?
(1) எதிரிவீர சரச்சந்திர (2) பண்டிட் அமரதுங்க
(3) பராக்கிரம நெரியெல்ல (4) ஆர். சமரக்கோன்
(5) பீற்றர் டி சில்வா (........)

**30.** சங்காரம், மழை, சரிபாதி போன்ற நாடகங்களை எழுதியவர்
(1) க. கணபதிப்பிள்ளை (2) பிரான்சிஸ் ஜெனம்
(3) சி. மௌனகுரு (4) இந்திரா பார்த்தசாரதி
(5) தாசீசியஸ் (........)

**31.** பின்வருவோருள் 'சிங்கள வீதி நாடக உலகின் அரசர்' எனப் போற்றப்படுபவர் யார்?
(1) குணசேன கலப்பதி (2) ஹென்றி ஜெயசேன
(3) சுகதபால டீ சில்வா (4) ஆர். ஆர். சமரக்கோன்
(5) காமினி ஹத்தொட்டுவேகம (........)

**32.** யப்பானிய நோ நாடகங்களில் காத்திரப் பண்பும் பயபக்தியும் கொண்ட Noh நாடக வகை
(1) Asura வகை (2) Kasuramono வகை
(3) Genzaimono வகை (4) Waki Noh வகை
(5) Kiri Noh வகை (........)

**33.** மத்திய கால ஐரோப்பிய அரங்கில் 'பருவச் சுழற்சி நாடகங்கள்' என அழைக்கப்படுவது
(1) மறைபொருள் நாடகம் (2) அற்புத நாடகம்
(3) புனிதரின் நாடகம் (4) பொது வணக்கமுறை நாடகம்
(5) வீர நாடகம் (........)

**34.** பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலைகள் தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) வெளிப்பாட்டுத் தன்மைக்கேற்ப தனித்துவமானவை.
(2) மீளுருவாக்கம் செய்ய முடியாதவை.
(3) கலையாக்கம் மற்றும் படைப்பாக்கத்துடன் தொடர்புடையவை.
(4) பயனை முதன்மையாகக் கொண்டவை.
(5) நுகர்வோரின் மனதில் ஆழ்ந்த பதிவை ஏற்படுத்துபவை. (........)


**35.** அரங்க உலகில் 'யப்பானிய சேக்ஸ்பியர்' என அழைக்கப்படும் சிக்க மற்சு மொன்சேமன் எழுதிய நாடகவகை
(1) நோ (2) கபுகி (3) புண்றக்கு
(4) கோவாக்கா (5) கிஜோஜன் (........)

PAST PAPERS WIKI

**36.** சிங்கள அரங்க வரலாற்றில் 'நாடகம' எனும் வடிவம் தோன்றி மீண்டும் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம்
(1) ஒரே வகையான பாடல்களும் ஒரே வகையான நடிப்பும்
(2) நாடகத்தை விட பாடல் மேலோங்கிக் காணப்பட்டமை
(3) சமூக சீர்த்திருத்தக் கதைகள் உள்ளடக்கப்படாமை
(4) வெவ்வேறு பண்பாடுகளின் கலப்பு அம்சங்கள்
(5) நாடகச் சூழமைவு தொடர்பான போதிய அறிவுடைய எழுத்துருக்கள் இன்மை (........)


**37.** பின்வரும் நாடகச் சூழமைவுகளுள் சொக்கரி நாடகத்தில் **காணப்படாதது**
(1) குரு காமியும் சொக்கரியும் பறையாவும் மரத்தை அரிதல்
(2) ஆசாரியுடன் சேர்ந்து தோணி செய்தல்
(3) சொக்கரியின் குழந்தையைத் தாலாட்டுதல்
(4) தோணியிலேறி கடலைத் தாண்டுதல்
(5) சொக்கரியும் வைத்தியரும் பாய் இழைத்தல் (........)

**38.** இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட நாடகம் யாது?
(1) உறவுகள்
(2) எந்தையும் தாயும்
(3) நட்பு
(4) ஒரு பாவையின் வீடு
(5) வேள்வித்தீ



(........)

**39.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள வாத்தியம் பயன்படுத்தப்படும் பிரதேசக்கூத்து யாது?
(1) காமன் கூத்து
(2) காத்தவராயன் கூத்து
(3) கோவலன் கூத்து
(4) வடமோடிக் கூத்து
(5) தென்மோடிக் கூத்து



(........)

**40.** இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ள நடனம் ஆடப்படும் இந்தியப் பிராந்தியம் யாது?
(1) மகாராஸ்டிரா
(2) ஆந்திரா
(3) கேரளா
(4) தமிழ்நாடு
(5) குஜராத்



(........)

* *

Past Papers Wiki



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II
Drama and Theatre (Tamil) II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** (i) கோடை நாடகத்தின் பிரதான மோதுகையினையும் எந்தெந்தப் பாத்திரங்களின் ஊடாக இம் மோதுகை வெளிப்படுகின்றது என்பதனையும் எடுத்துக்காட்டுக. (05 புள்ளிகள்)

(ii) கோடை நாடகத்தில் மாணிக்கம், பஞ்சையர் ஆகிய பாத்திரங்கள் வளர்த்தெடுக்கப்பட்ட முறை பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

**2.** (i) இராவணேசன் நாடகத்தின் கரு, மோடி, பாத்திரங்கள் என்பவற்றைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) இராமன், இராவணன் ஆகிய பாத்திரங்களுக்கு இடையேயான மோதுகை செயல்நிலையில் வெளிப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) இந்நாடகத்தில் இலக்குமணன் பாத்திரம் பெறும் முக்கியத்துவத்தை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) காளிதாசரின் படைப்புகளில் அபிக்ஞான சகுந்தலம் சிறந்த நாடகமாகும். இந்நாடகத்தில் வரும் சமூக, பண்பாட்டு அம்சங்கள் **ஐந்தினைத்** தருக. (05 புள்ளிகள்)

(ii) இந்நாடகத்தில் வரும் செயல்நிலைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு, அச்செயல்நிலைகளில் காணப்படும் **இரண்டு** பாத்திரங்களின் குணவியல்புகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) இந்நாடகத்தை வாசித்தவர் / பார்வையிட்டவர் என்ற வகையில் இதில் உள்ளடக்கி உள்ள லோக தர்மிக்குரிய பண்புகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** பின்வரும் அரங்க நிறுவனங்களை ஸ்தாபித்தவர்களைக் குறிப்பிட்டு, அவற்றின் அரங்குசார் நோக்கங்கள், செயற்பாடுகள் என்பவற்றை விளக்குக.

(i) நாடக அரங்கக் கல்லூரி
(ii) அரங்கச் செயற்பாட்டுக் குழு
(iii) அரங்க ஆய்வுகூடம் (15 புள்ளிகள்)

**5.** கூத்தின் ஆரம்ப அறிவிப்பு, கூத்தின் ஒத்திகைக் காலம், கூத்தின் ஆற்றுகை முறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கூத்தின் குழும அரங்கப் பண்புகள் மேற்கிளம்பும் முறையினை எடுத்துக்காட்டுக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) வேட்டைத் திருவிழா
(ii) சொக்கரி
(iii) நாடக விமர்சனம்
(iv) குறு நாடக ஆக்கம்
(v) தொழில்நுட்பக் கலைகள் (05 × 3 = 15 புள்ளிகள்)

※※※

இங்கே வேறாக்கவும்

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library